## ஒன்றிய அரசுக்கும் இதர மாநிலங்களுக்கும் வழி காட்டும் 'திராவிட மாடல்' அரசு !

# பொது சுகாதார வசதிகளை எளிதில் கிடைக்கச் செய்யும் புதுமையான மருத்துவத் திட்டங்கள் !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் – தமிழ்நாடு அரசின் மருத்துவ நலத்திட்டங்கள் குறித்து சிறப்புப் பேட்டி !

சென்னை, ஆக. 27 -

**மக்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் காலங்களில் எல்லாம் புதுமையான பல மருத்துவத் திட்டங்களை நிறைவேற்றி இந்திய ஒன்றிய அரசுக்கும் பிற மாநிலங்களுக்கும் தொடர்ந்து வழி காட்டி வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2021 ஆம் ஆண்டு முதல் மக்களைத் தேடி மருத்துவம் முதலான பல திட்டங்களை நிறைவேற்றி ஏழை எளிய மக்களுக்கும் அவர்களுடைய வீடுகளைத் தேடிச் சென்று மருத்துவ வசதிகள் எளிதில் கிடைக்கச் செய்வதில் முன்னுரிமை அளித்து வருகிறார்கள். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஐக்கிய நாடுகள் நிறுவனமே பாராட்டி திராவிட மாடல் அரசுக்கு விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. இத்தகைய திராவிட மாடல் அரசின் மகத்தான மருத்துவ நலத் திட்டங்கள் மக்களுக்கு எளிதில், அவர்கள் வாழும் இடங்களுக்கு அருகிலேயே கிடைக்கச் செய்துவரும் பணிகள் குறித்து ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள சிறப்பு பேட்டி பின்வருமாறு :**

"மயிலாப்பூரைச்சேர்ந்த சக்கர நாற்காலி பயன்படுத்தும் மூத்த குடிமகள் ஃபாசியா பீவி, சென்னையில் அண்மையில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சுகாதார முகாம் குறித்த அனுபவத்தைப் பற்றிக் கேட்டபோது, அவர் "நான் ஒரு அனாதையாக வந்தேன், ஆனால் முழு மனதுடன் செல்கிறேன்" என்று கூறினார்.

சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதரவுடன், வழக்கமான பரிசோதனைகளுக்காக அரசு மருத்துவமனைக்குச் செல்வதற்குச் சிரமப்பட வேண்டியிருந்த ஃபாசியா பீவி, இந்த முகாமில் ஒரே இடத்தில் ECG, ECHO மற்றும் கண் பரிசோதனைகள் செய்து, சில மணிநேரங்களில் பரிசோதனை அறிக்கைகளுடன் வீடு திரும்பினார்.

இதுபோன்ற குடிமக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்தில் தொடங்கப்பட்ட நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், ஆயிரக்கணக்கானோரின் மனமார்ந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. தரமான சுகாதாரப் பராமரிப்பு என்பது ஓர் அடிப்படை உரிமை என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுகிறது.

தமிழ்நாட்டிற்கு உள்ள சுகாதாரச் சவால்கள், செலவு மற்றும் அணுகல் மட்டுமல்ல; செழிப்பை அடையும் ஒரு சமூகத்தின் மாறிவரும் ஆரோக்கியப் பாதுகாப்பு நடைமுறைகள் (Health Profile) ஒரு சவாலாகும். உலக அளவில், பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்பட்டு வரும் வேளையில், தொற்றா நோய்கள் (Non-communicable diseases) வேகமாக அதிகரிப்பதைக் காண முடிகிறது.

2020-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 33.9 சதவீத முதியவர்கள் உயர் இரத்த அழுத்தத்துடனும், 17.6 சதவீதத்தினர் நீரிழிவு நோயுடனும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நோய்கள் பெரும்பாலும் பல ஆண்டுகளாகக் கண்டறியப்படாமல் இருக்கின்றன.

**தேசிய குடும்ப நல ஆய்வறிக்கையும் தமிழ்நாட்டு மகளிரும்**

குடும்ப நல ஆய்வறிக்கை-5ன் படி (National Family Health Survey-5), தமிழ்நாட்டில் 30 வயது முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்களில் 9.8 சதவீதத்தினர் மட்டுமே கருப்பை வாய்ப் புற்றுநோய் (Cervical Cancer) பரிசோதனையைச் செய்துள்ளனர். மேலும், 5.6 சதவீதப் பெண்கள் மட்டுமே மார்பகப் புற்றுநோய் (Breast Cancer) பரிசோதனை செய்துள்ளனர். இந்த அளவீடுகளில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட முன்னணியில் இருந்தாலும், நாம் உலக அளவில் முன்னேறிய நாடுகளின் தரத்துடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இந்தச் சவால்களை எதிர்கொள்ளவும், சுகாதார விளைவுகளை மேம்படுத்தவும், ஒரு தார்மீகப் பொறுப்புணர்வுடன் திராவிட மாடல் அரசு பல புதிய சுகாதாரத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

**அதிகரித்துள்ள திராவிட மாடல் அரசின் நிதி ஒதுக்கீடு**

உடனடி மற்றும் எளிதில் அணுகக்கூடிய திட்டங்கள் இன்று மக்களுக்கு உதவியாக இருந்தாலும், நீண்டகால முதலீடுகள் நாளைய சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தும். 2025-26 ஆம் நிதியாண்டிற்கான சுகாதார மற்றும் குடும்ப நலத்துறைக்கு ரூ. 21,906 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது முந்தைய ஆண்டை விட 8.4 சதவீதம் அதிகம்.

**'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாம்கள்**

ஒவ்வொரு சனிக்கிழமையும், நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள், இரத்தப் பரிசோதனைகள், ஈ.சி.ஜி (ECG) மற்றும் எக்கோ (ECHO) பரிசோதனைகள் முதலியவற்றை ஒரே இடத்தில் வழங்குகின்றன. இந்த முகாம்கள் ஒரு சமூகத்தில் பொதுமக்கள் கூடும் பொது நிகழ்வைப் போல வடிவமைக்கப்பட்டுள்ளன. இது, நோய்த் தடுப்புப் பராமரிப்பில் (Preventive Care) சமூகத்தினர் பங்கேற்பதை ஊக்குவிக்கிறது. கடந்த 2.8.2025 அன்று தொடங்கப்பட்ட இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் இரண்டு நாள்க ளில், சுமார் 93,000 பேர் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர், குறிப்பாக கிராமப் புறங்களில் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

**மக்களின் வீட்டு வாசலுக்கே....**

இந்தியாவில் முன்னோடித் திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், தொற்றா நோய்களைக் கண்டறியும் வசதியை மக்களின் வீட்டு வாசலுக்கே கொண்டு செல்கிறது. இந்தத் திட்டம் 385 கிராமப்புற வட்டங்கள், 8,713 துணை மையங்கள், 21 மாநகராட்சிகள் மற்றும் 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் செயல்படுத்தப்படுகிறது.

மாநிலத் திட்டக் குழு நடத்திய ஒரு ஆய்வில், இத்திட்டம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் சொந்த மருத்துவச்செலவைப் பாதியாகக் குறைத்துள்ளது என்பது தெரியவந்துள்ளது. இத்திட்டத்திற்கு முன்பு, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தப் பரிசோதனை செய்திருந்தனர்; திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

**இதயம் காப்போம் திட்டம்**

இத்திட்டம் 2023 - ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டது. மாரடைப்பு தடுப்பு நடவடிக்கையாக, மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பு ஏற்படும் இறப்புகளைத் தடுக்க, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்களில் அத்தியாவசிய இருதய மருந்துகளின் அவசர டோஸ்களை இத்திட்டம் கிடைக்கச் செய்துள்ளது.



**'பாதம் பாதுகாப்போம்' திட்டம்**

இத்திட்டம் 2024- அக்டோபரில் அறிமுகப்படுத்தப்பட்டது. நீரிழிவு நோயாளிகளின் பாதங்களில் ஏற்படும் சிக்கல்களைக் கையாளுகிறது.

இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்-48 திட்டம்

விபத்துகளில் பாதிக்கப்படுவோரின் உயிர் காக்கும் இலவச சிகிச்சைக்குரிய தொகையை ரூ.1 லட்சத்திலிருந்து ரூ. 2 லட்சமாக உயர்த்தியுள்ளது.

**'திராவிட மாடல்' அரசு விரிவுப்படுத்தவுள்ள மூன்றாம் நிலை சிகிச்சை வசதிகள்**

தமிழ்நாடு அரசு, பெரிய அளவிலான அரசு மருத்துவமனைகள் மற்றும் சிறப்பு வசதிகளுடன் கூடிய மூன்றாம் நிலை சிகிச்சை (Tertiary Care) வசதிகளுக்காக உள்கட்டமைப்பை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தியுள்ளது. சென்னை கிண்டியில் உள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, 1,000 படுக்கைகள் கொண்ட ஒரு முதன்மை மருத்துவமனையாகும். இதில் ரோபோடிக் அறுவை சிகிச்சை மையம் மற்றும் சாம்பல் நீர் மறுசுழற்சி அமைப்பு போன்ற மேம்பட்ட வசதிகள் உள்ளன. தாம்பரம் சானிடோரியத்தில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் புறநகர் பிரிவு, 14 பல் மருத்துவ நாற்காலிகள் மற்றும் ஒரு பயிற்சி மையம் உட்பட அதிநவீன பல் மருத்துவ வசதிகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்த, 19 துணை மாவட்ட மருத்துவமனைகளை, மாவட்டத் தலைமை மருத்துவமனை நிலைக்குத் தரம் உயர்த்தும் கட்டுமானப் பணிகளையும் அரசு தொடங்கியுள்ளது. மேலும், 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், ஒவ்வொன்றும் 700 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**புற்றுநோய்ப் பரிசோதனைத் திட்டம்**

மாநிலம் முழுவதும் 100 சதவீதம் புற்றுநோய்ப் பரிசோதனை செய்வதை இலக்காகக் கொண்ட ஒரு புற்றுநோய் பரிசோதனைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இது குறிப்பாகப் பெண்களிடையே ஏற்படும் கருப்பை வாய், மார்பகம் மற்றும் வாய்ப் புற்றுநோய்கள்

மீது கவனம் செலுத்துகிறது. அதே நேரத்தில், புதிதாகக் கண்டறியப்படும் நோயாளிகளுக்குச் சிறப்பாகச் சிகிச்சை அளிப்பதற்காக, மண்டலப் புற்றுநோய் மையங்கள் (Regional Cancer Centres) வலுப்படுத்தப்பட்டுள்ளன.

அரசு தொடங்கியுள்ள ஒவ்வொரு திட்டமும் திராவிட மாடல் அரசின் (Dravidian Model) கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இந்தக் கொள்கை, பொது சுகாதாரத்தைச் சமூக முன்னேற்றத்துடன் நீண்ட காலமாகப் பிணைத்து வைத்துள்ளது. சமத்துவக் கொள்கைகள், நிர்வாகங்களுக்கிடையேயான தொடர்ச்சி மற்றும் அனைவருக்கும் பொதுவான நலத்திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் 108 இலவச ஆம்புலன்ஸ் சேவை போன்றவை இன்றும் நிலைத்து நிற்கும் சிறந்த திட்டங்களாகும்.

**உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை முதன் முதல் தொடங்கியது தமிழ்நாடு**

2008-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தைத் (Cadaver Transplant Programme) தொடங்கி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையை மேற்கொண்டார். இதன் மூலம் தமிழ்நாடு, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் முன்னோடியாக மாறியது. இந்தத் திட்டம் ஆயிரக்கணக்கானோருக்கு மறுவாழ்வு அளித்ததுடன்,

நாட்டின் மற்ற மாநிலங்களும் பின்பற்றக்கூடிய ஒரு முன்மாதிரியாகவும் அமைந்தது. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு இன்றும் இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. மேலும், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு வாழ்நாள் முழுவதும் இலவச மருந்துகளை வழங்குகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சுகாதாரப் பராமரிப்பு என்பது ஒரு சமூக சீர்திருத்தத்திற்கான கருவி என்பதையும் அறிந்திருந்தார். 2007-ஆம் ஆண்டில், கல்வித்துறையில் முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத இடஒதுக்கீடு கொண்டு வரப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று, அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இடையில் அதிக மருத்துவர்களை உருவாக்கி, பொது சுகாதார அமைப்பில் தாங்கள் பாதுகாப்பாக வாழ்வதை உறுதி செய்வதாகும்.

**பட்ட மேற்படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்காக நடத்தப்பட்ட சட்டப் போராட்டம்**

அரசு, சிறப்பு மருத்துவப் படிப்புகளில் (Super-specialty courses) பணிபுரியும் மருத்துவர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதை உறுதி செய்ய உச்ச நீதிமன்றத்தில் ஒரு சட்டப் போராட்டத்தை நடத்தியது. இது, அரசு மருத்துவமனைகளில் பன்முகத்தன்மையை உறுதி செய்வதோடு, மாநிலம் முழுவதும் மூன்றாம் நிலை சிகிச்சை மையங்களை (Tertiary Care Centres) விரிவுபடுத்துவதற்கும் வழிவகுத்தது.

**ஒன்றிய அரசின் "மையப்படுத்தும் தலையீடுகள்"**

ஒன்றிய அரசின் கடுமையான நடவடிக்கைகளால் இவையெல்லாம் இப்போது ஆபத்தில் உள்ளன. தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன் சுகாதார மற்றும் மருத்துவக் கல்வியில் மாநில சுயாட்சி குறித்து அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், ஒன்றிய அரசின் "மையப்படுத்தும் தலையீடுகள்" (Centralising Interventions) இந்தியாவின் சுகாதார அமைப்பின் கூட்டாட்சித் தன்மையை (Federal Spirit) எவ்வாறு படிப்படியாகக் குறைத்துவிட்டன என்பதை எடுத்துரைத்துள்ளார்.

**தேசிய மருத்துவ ஆணையத்தின் விளைவு**

தேசிய மருத்துவ ஆணையம் (National Medical Commission-NMC): மாநிலப் பிரதிநிதிகளைக் கொண்ட இந்திய மருத்துவக் கவுன்சிலுக்குப் பதிலாக, தேசிய மருத்துவ ஆணையம் கொண்டு வரப்பட்டது. இது மையப்படுத்தலை மேலும் ஆழப்படுத்தியுள்ளது.

**சமூக நீதிக்கு ஊறு ஏற்படுத்தும் நீட் முதலான தேர்வுகள்**

NEET மற்றும் NEXT போன்ற தேசிய தேர்வுகள் வட்டார மொழி வழி மற்றும் கிராமப்புற மாணவர்களைப் பாதித்து, மாநிலத்தின் சமூகநீதிக் கொள்கைகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. மேலும், தேசிய மருத்துவ ஆணையம் (NMC) சட்டம் தனியார் கல்லூரிகளில் அதிக கட்டணம் வசூலிக்க அனுமதிப்பதன் மூலம்,மருத்துவக் கல்வி வணிகமயமாக்கலைத் தூண்டுகிறது.

**மையப்படுத்தப்பட்ட திட்டங்கள்**

ஒன்றிய அரசின் திட்டங்கள், மாநிலங்களுக்கு அதிக வரிப் பங்கீட்டை வழங்குவதற்குப் பதிலாக, மையத்தால் வடிவமைக்கப்பட்ட திட்டங்களை, ஒற்றைத் தன்மையுடன் (Uniform Templates) செயல்படுத்துகின்றன. இது, தமிழ்நாட்டின் ஆரம்ப சுகாதார மையங்கள் போன்ற மாநிலத்திற்கேற்ற மாதிரித் திட்டங்களைப் பலவீனப்படுத்துகிறது.

**அதிகரித்து வரும் மையப்படுத்தல்**

மருந்து ஒழுங்குமுறை, உறுப்பு மாற்று திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் சுகாதார அமைப்புகள் ஆகியவற்றின் மீதான அதிகரித்து வரும் மையப்படுத்தல் முறைகள் மாநிலங்களின் சுயாட்சிக் கோட்பாடுகளைத் தடுக்கிறது.

ஒன்றிய அரசின் "அனைவருக்கும் ஒரே தீர்வு" (One-size-fits-all) என்ற இந்த அணுகுமுறை, புத்தாக்கத்தைக் குறைத்து, கொள்கை அமலாக்கத்தில் இடைவெளிகளை உருவாக்குகிறது. இது, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களுக்கும் உள்ள பல்வேறு பிராந்திய சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தோல்வியடைகிறது.

ஒன்றிய அரசு, அனைத்து மாநிலங்களுக்கும் அவர்களின் குறிப்பிட்ட மக்கள் தொகைக்கேற்ற தேவைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கான கொள்கைகளை வடிவமைக்க சுதந்திரம் மற்றும் சுயாட்சி வழங்க வேண்டும். ஒரு கண்டிப்பான ஒழுங்குமுறை ஆணையமாகச் செயல்படுவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு ஒரு வசதியளிக்கும் மற்றும் வழிகாட்டி உதவும் அமைப்பாகச் செயல்பட வேண்டும். இதன் மூலம், அனைத்து மாநிலங்களும் தங்கள் சுகாதார இலக்குகளை அடைய முடியும்"

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள்.





கோவை மாநகராட்சி, மத்திய மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம் ரூ.21.55 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் புதுப்பிக்கும் பணியினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு துவக்கி வைத்தார். இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாவட்டச் செயலாளர்கள் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், திருப்பூர் மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர்கள் மா.சிவகுரு பிரபாகரன் (கோவை), அமித் (திருப்பூர்), உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.பிரசாத், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், அ.சுல்தானா, மாநகர தலைமைச் பொறியாளர் விஜயகுமார், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், மத்திய மண்டலத்தலைவர் மீனாலோகு உள்பட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருவொற்றியூர் தியாகராஜசுவாமி கோயிலுக்குச் சொந்தமான

# ரூ.24 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்பு!

### இந்து சமய அறநிலையத்துறை தகவல்!

*சென்னை, ஆக. 27 -*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில் களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் (25.08.2025) சென்னை,திருவொற்றியூர், தியாகராஜ சுவாமி திருக்கோயி லுக்கு சொந்தமான ரூ.24 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் வெள்ளிவாயல் கிராமத்தில் திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான (வேப்பங்கொண்டா ரெட்டிபாளையம்) சர்வே எண்.213ல் 6 ஏக்கர் 32 சென்ட் மற்றும் சர்வே எண்.214ல் 4 ஏக்கர் 63 சென்ட் ஆக மொத்தம் 10 ஏக்கர் 95 சென்ட் விஸ்தீரணம் கொண்ட திருக்கோயில் நிலங்கள் உள்ளன.

இதனை ராமநாதரெட்டியார், கிருஷ்ணன், தசரதன் ஆகிய மூவரும் 2004 ஆம் ஆண்டு குத்தகை காலம் முடிவுற்றும், திருக்கோயில் வசம் சுவாதீனம் ஒப்படைக்காமல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திருக்கோயில் நிர்வாகம் உரிமை கோராமல் இருக்கவும், தாவா சொத்தினை அவர்கள் அனுபவிப்பதற்கு எவ்வித இடையூறு ஏற்படாமல் இருக்கவும், நிரந்தர உறுத்து கட்டளை பிறப்பிக்க கோரிய அசல் வழக்கு மற்றும் மேல்முறையீடு வழக்குகளில் திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இச்சொத்தினை மீட்பதற்கு உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர் செல்வி கே.எஸ்.நற்சோணை முன்னிலையில், நேற்று முன்தினம் (25.08.2025) வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி, திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.24 கோடியாகும். இந்நிகழ்வின்போது வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) சத்தியேந்திரராஜ், ஆய்வாளர் திருமதி அறிவுச்செல்வி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் நகர்ப்புற பகுதிகளிலுள்ள அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்த இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து அனைத்து மாவட்டத்திலும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யும் பணிகள் நேற்று தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் பணிகளை தொடங்கி வைத்து, காலை உணவுகளை வழங்கினார்கள். நேற்று தொடங்கி வைத்த இந்திட்டத்தின் மூலம் நமது மாவட்டத்தில் 63 பள்ளிகளிலுள்ள 2645 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.





தமிழ்நாடு முன்னேற கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்றுணர்ந்து, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில், முன்னாள் அ.தி.மு.க. ஒன்றிய குழு தலைவர் பாலமுருகன் ஏற்பாட்டில், வாங்கல் ஈ.வெ.ரா தெரு பகுதியைச் சேர்ந்த 75 நபர்கள், காதப்பாறை முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கஸ்தூரி ஏற்பாட்டில் 30 மாற்றுக் கட்சியினர், வெங்கமேடு செல்வ நகரைச் சேர்ந்த 6 மாற்றுக் கட்சியினர், நெரூர் மேல்பாகத்தைச் சேர்ந்த 5 நபர்கள், வெள்ளியனை பகுதியை சேர்ந்த 36 மாற்றுக் கட்சியினர், வெள்ளியனை சமத்துவபுரம் 12 நபர்கள், கல்லுமடை & வாங்கல் சீனிவாசபுரத்தைச் சேர்ந்த 23 நபர்கள், புகழூர் ஹைஸ்கூல் மேடு பகுதியை சேர்ந்த 10 நபர்கள், மேலும், கரூர் வடக்கு ஒன்றியம், மண்மங்கலம் மேதி நகர் அ.தி.மு.க. கிளை செயலாளர் மாணிக்கம் (முன்னாள் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்), நிர்வாகிகள் சிவானந்தம், மணி, மோகன், 10 நபர்கள், கரூர் மேற்கு பகுதி தவெக ராஜ், வெங்கடேஷ், மற்றும் நிர்வாகிகள், அ.தி.மு.க., கோபி, மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள், கரூர் தெற்கு பகுதி சிவலிங்கம் (முன்னாள் அ.தி.மு.க. வட்ட கழக செயலாளர்) தலைமையில் சபரிசன், மோகன்குமார் மற்றும் நிர்வாகிகள், உட்பட 300க்கும் மேற்பட்டவர்கள் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.